## குறிப்பு: பதிவு செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. விண்ணப்பதாரர்கள் (சம்பந்தப்பட்ட வணிக அமைப்பு) செல்லுபடியாகும் வணிகப் பதிவைக் கொண்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக இருந்தால், ஒருங்கிணைப்புச் சான்றிதழின் நகல்
2. விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய தயாரிப்புகளை வழங்குவதில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தொடர்புடைய ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களை விண்ணப்பத்துடன் பதிவேற்ற வேண்டும்.
3. விண்ணப்பதாரர் பொருட்களை வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் குறைந்தபட்சம் 30 நாட்கள் கடன் காலத்தை வழங்குவதற்கு ஒப்புக் கொள்வதுடன் போக்குவரத்து வசதியை வழங்கவும் திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. கோரப்பட்ட ஆவணங்களை முறையாகச் சமர்ப்பிக்காதவிடத்து பதிவு செய்வதற்குக் கருத்தில்கொள்ளப்படாது.
5. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான அழைப்பிற்கு தொடர்ச்சியாக இரண்டு தடவைக்கு மேல் பதிலளிக்காத அல்லது முன்னர் வழங்கப்பட்ட எந்தவொரு கொள்முதலின் கீழும் திருப்தியற்ற முறையில் செயல்பட்ட எந்தவொரு விநயோகஸ்தரும் வழங்குனர் பதிவிலிருந்து நீக்கப்படுவார்.
6. பதிவுக்கு விண்ணப்பிக்கப்படும் வகைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மொத்தத் தொகைக்கு மேலே உள்ள வழிமுறைகளின்படி திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத்தொகை செலுத்தப்பட்டமைக்கான கட்டண ரசீதுகள் பதிவேற்றப்பட வேண்டும்.
7. உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரிப் பதிவு, சமூகப் பாதுகாப்பு வரி அல்லது பெறுமதி சேர் வரி-விலக்குச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் பதிவேற்றப்பட வேண்டும்.
8. விலைமனுக்களில் பெறுமதி சேர் வரிக் கட்டணம் உள்ளடக்கப்பட்டிருந்தால், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையர் வழங்கிய கடிதத்தில் உங்களுடைய பெறுமதி சேர் வரி செயற்படு நிலையில் உள்ள கோப்பு உள்ளதாக்

குறிப்பிடப்பட்டிருப்பதுடன், சமீபத்திய பெறுமதி சேர் வரி அனுமதிச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

9. தயாரிப்பின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகச் சின்னத்தின் உற்பத்தியாளர்/உரிமையாளர் அல்லது வர்த்தக முத்திரை உரிமையாளர்களான விண்ணப்பதாரர்கள், முதன்மை அல்லது தொடர்புடைய அதிகாரியால் வழங்கப்பட்ட அங்கீகாரக் கடிதத்தைப் பதிவேற்ற வேண்டும்.
10. 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் அரசு அல்லது தனியார்த் துறை நிறுவனங்களுக்கு இதே போன்ற வகைப் பிரிவுப் பொருட்களை அதிக அளவில் வழங்கிய விண்ணப்பதாரர்கள், அத்தகைய பொருட்கள் தொடர்பான கொள்முதல் ஆணைகள் / விலைமனுக்களின் நகல்களைப் பதிவேற்ற வேண்டும்.
11. விண்ணப்பம் இறுதி திகதி வரையில் திருத்தப்படலாம்.
12. விண்ணப்பம் வெற்றிகரமாகச் சமர்க்கப்பட்ட பின்னர், அதன் நகல் உங்கள் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும். சமர்ப்பித்ததற்கான சான்றாக அதை வைத்துக் கொள்ளவும்.

**கட்டணம் செலுத்தும் வழிமுறைகள் மற்றும் வகைத் தேர்வு**

13. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வகைப் பிரிவிற்கும் ரூ. 2,000/- திரும்பப் பெற முடியாத கட்டணமாக செலுத்த வேண்டும்.

(எடுத்துக்காட்டாக, 1.1 ஒரு வகைப் பிரிவைக் குறிக்கிறது).

உதாரணமாக, நீங்கள் மூன்று வகைப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்தால், மொத்த கட்டணம் ரூ. 6,000 ஆக இருக்கும்.

**அதிகமாக செலுத்தப்பட்ட தொகை மீளளிப்புச் செய்யப்படாது:** நீங்கள் தேவையான தொகையை விட அதிகமாக செலுத்தினால் (எ.கா., இரண்டு வகைகளுக்கு ரூ. 6,000), அதிகப்படியான தொகை திருப்பித் தரப்படாது. இருப்பினும், நீங்கள் நேரடியாக விநியோகக் கிளையைத் தொடர்புகொள்வதன் மூலம் கூடுதல் வகைப் பிரிவைத் தேர்ந்தெடுக்கலாம்.

**குறைவான கட்டணம் உங்கள் விண்ணப்பத்தைப் பாதிக்கும்:** தேர்ந்தெடுக்கப்பட்ட வகைகளின் எண்ணிக்கையுடன் கட்டணம் பொருந்தவில்லை என்றால், செலுத்தப்பட்ட தொகையின் அடிப்படையில் தேர்வு வரிசையில் முதல் வகைப் பிரிவுகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். உதாரணமாக, நீங்கள் மூன்று வகைகளைத் தேர்ந்தெடுத்து ரூ. 4,000 மட்டுமே செலுத்தி இருப்பின், முதல் இரண்டு வகைப் பிரிவுகள் மட்டுமே செயல்படுத்தப்படும். மூன்றாவது வகைப் பிரிவு புறக்கணிக்கப்படும்.

தாமதங்கள் அல்லது தகுதியிழப்புகளைத் தவிர்க்க, தேர்ந்தெடுக்கப்பட்ட வகைகளின் எண்ணிக்கையுடன் உங்கள் கட்டணத் தொகை துல்லியமாகப் பொருந்துவதை உறுதிசெய்யவும்.

விண்ணப்பதாரர்கள் திரும்பப்பெற முடியாத பதிவுக் கட்டணத்தை 505170600013 என்ற குறிப்பு எண்ணைப் பயன்படுத்தி, திம்பிரிகஸ்யாய மக்கள் வங்கிக் கிளையில் உள்ள கொழும்பு பல்கலைக்கழக முதன்மை சேகரிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய வேண்டும். மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் பணம் செலுத்தலாம்.